முருகப்பெருமான் துணை

**மகான் சங்கமுனிச் சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.01.2024**, திங்கட்கிழமை

1. தரும வழி கண்ட அரங்கனே
   தவ வலிமை அனைத்தையும்
   தருமபலமாக்கி கலியுகத்தில்
   தனிப்பெருங் கருணை வடிவாக
2. கருணை வடிவாக அருளுகின்ற
   கந்த வேலனின் அவதார ஞானியே
   ஆறுமுக அரங்கனே உமை போற்றி
   அறிவிப்பேன் சங்கமுனிச் சித்தர் யானும்
3. யானும் துல்லிய ஆசிதனை
   உயர்வான சோபகிருது கலைதிங்கள்
   ஞானமுள மூவைதிகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் தை மாதம் 15 ம் நாள், 29.01.2024, திங்கட்கிழமை)
   நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
4. நலம்தரும் ஆன்மீக வழிகாட்டும்
   ஞான தேசிகன் கொள்கைகள்
   பலம் தரும் வேலவன் ஆசியாகும்
   பரிபக்குவமும் தரும் மெய்வழி ஆகும்
5. ஆகவே அரங்கன் சன்மார்க்க
   ஆத்மபலம் தரும் சைவநெறி
   வகையாக ஏற்று உலகோரும்
   வணங்கி வர மனபலம் திடம்
6. திடமுற சிந்தை தெளிவுபட
   தெரிவிப்பேன் தெய்வநெறியை
   தடையற அடைந்து உலகோர்
   தன்னார்வத் தொண்டர்களாகி
7. ஆகியே சிவநெறி சைவ நெறி
   அடையாளம் பெற அன்னதானம்
   அகிலமதில் சேவையாக ஆற்றி
   அனைவரின் பசிபிணி விரட்டி

8. விரட்டியே கலியினில் தருமம்தனை
விசாலமாக்கி அளவிலா தருமசாலை
திரட்டியே எங்கும் எதிலும்
தேசிகன் விதைத்த மாதருமம்

9. மாதருமம் வளரவகை செய்து
மாண்புள்ள மக்களாகியே
பூதலத்தில் நல்லத் தலைமையை
புண்ணிய வழி படைக்கும் சக்திகளாக

10. சக்திகளாக நிலைகள் கூடி
சாற்றிடுவேன் சமூக மாற்றம்
பக்திமிகு ஞானயுகமாற்றமாகி
பாருலகில் ஞானத் தலைமை

11. தலைமை கொண்ட வண்ணம்
தக்க ஞான ஆட்சி அமைந்து
உலகம் பாதுகாப்பு அமைதிபெறும்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—